FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

VSAIDIGI 8120318

1. District : திண்டுக்கல் மாவட்டம் PS: VSAIDIGI காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 10/26 முத.அ. எண் Date: 16.07.26 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a) and 12 r/w 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : 16.07.26 at 08.23 hrs நாள் வரை 16.07.26 at 15.00 hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.07.26 Time : நேரம் 18.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.07.26 Time : நேரம் 19.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக compulsorily typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 KM தென்கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம், செந்துறை கிராமம், நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Bavamani குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : தி.பரமசிவம் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : இந்தியன் நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : அரசுப்பணியாளர் தொழில் (g) Address : முகவரி திரும்பயபட்டி, செந்துறை, நத்தம் தாலுகா திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) தி.பி. தங்கவேலு, கிராம நிர்வாக அலுவலர் 2) தி.பி. சரவணன் கிராம உதவியாளர், கிராம நிர்வாக அலுவலகம், செந்துறை கிராமம், நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. மை 16.07.2026

16/07/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16.07.26 at 21.00 hrs

Name: பெயர் ஜெ. ஜெகதீசுவரன்
Rank: நிலை தலைமை காவலர் No. எண் .....
உ.தா.க. பாதை,
திண்டுக்கல்.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:10/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 16.07.2026-ம் தேதி மாலை 06.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல், நத்தம் தாலுகா, செந்துறை, குரும்பபட்டியை சேர்ந்த திரு.பாண்டியன் மகன் P.நவமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்த புகாரை பெற்று 16.07.2026-ம் தேதி மாலை 07.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், P.நவமணி, த/பெ பாண்டியன், குரும்பபட்டி, செந்துறை, நத்தம் தாலுகா, திண்டுக்கல். பெறுநர், உயர்திரு. DSP அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் செந்துறை, குரும்பபட்டியில் குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் Diploma in Mechanical Engineering படித்துவிட்டு எலெக்ட்ரீசியனாக வேலை செய்து வருகின்றேன். எனக்கு கடந்த 2022ம் வருடம் எங்கள் ஊரைச் சேர்ந்த கவிதா என்பவருடன் திருமணம் நடைபெற்றது. எனது மாமனார் திரு.சுப்பிரமணியன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தினை அவர் கடந்த 2021ம் ஆண்டு இறந்த பிறகு எனது மாமியார் திருமதி.விஜயா மற்றும் எனது மாமனாரின் தாயார் திருமதி.கெப்பம்மாள் மற்றும் எனது மனைவி திருமதி.கவிதா ஆகியோர் பாகவிஸ்தி செய்து கடந்த 01.08.2025ம் தேதி செந்துறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1280/2025ன் படி பதிவு செய்துள்ளனர். மேற்கண்ட பத்திரத்தின்படி எனது மாமியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து சுமார் 2.38 ஏக்கர் நிலத்தில் சர்வே எண். 270/3C1ல் பாத்தியப்பட்ட 7.66 செண்ட் நிலத்திற்கும், 270/3Aல் பாத்தியப்பட்ட 65 செண்ட் நிலத்திற்கும் எனது மாமியார் திருமதி.விஜயா அவர்கள் பெயரில் பட்டா பெறுவதற்கு நான் ஏற்பாடு செய்து சர்வேயர் மூலம் கடந்த 13.06.2026ம் தேதி எனது மாமியார் பெயரில் பட்டா பெற்றுவிட்டேன். மேலும் மேற்சொன்ன பத்திரத்தின்படி பாத்தியப்பட்ட 272/6C1 ல் உள்ள 1 ஏக்கர் 66 செண்ட் நிலத்திற்கு எனது மாமியார் பெயரில் பட்டா பெறுவதற்காக நான் செந்துறையில் உள்ள இ சேவை மையத்தில் கடந்த 10.07.2026ம் தேதி எனது மாமியார் கூறியதன் பேரில் விண்ணப்பித்தேன். அதன் பின்பு திங்கட்கிழமை 13.07.2026ம் தேதி காலை சுமார் 08.27

மணிக்கு செந்துறை கிராம நிர்வாக அலுவலர் திரு.தங்கவேலு அவருடைய செல்போன் எண். 90921 67813 லிருந்து எனது செல்போன் எண். 6385333684க்கு தொடர்பு கொண்டு பட்டா மாறுதல் சம்மந்தமாக விண்ணப்பித்துள்ளீர்களா என்று கேட்டார். நான் ஆம் என்று சொன்னேன். அதற்கு அது சம்மந்தமான ஆவணங்களை எடுத்துக் கொண்டு 12 மணிக்கு அலுவலகம் வருமாறு கூறினார். அதன் பேரில் நான் ஆவணங்களை எடுத்துக்கொண்டு செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு எதிரே உள்ள தனியார் காம்ப்ளக்சில் இயங்கிவரும் செந்துறை கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சுமார் 11.30 மணிக்கு சென்று VAO வை சந்தித்தபோது அவர் அவசரமாக வெளியே கிளம்பிக் கொண்டிருந்ததால் அங்கிருந்த கிராம உதவியாளர் திரு.சுரேஷ் அவர்களிடம் ஆவணங்களை கொடுத்துவிட்டு செல்லுமாறு கூறினார். அப்போது நான் திரு.சுரேஷ் அவர்களிடம் ஆவணங்களை கொடுத்தேன். அதற்கு அவர் VAO வுடன் அவரும் அவசரமாக வெளியில் செல்வதாகவும் ஆவணங்களை நகல் எடுத்து, அதனை அலுவலகத்திற்கு அருகிலுள்ள மாட்டு தீவனங்கள் விற்பனை செய்யும் கடையில் கொடுத்துவிட்டுச் செல்லுமாறும் அவர் அலுவலகம் வந்த பிறகு அதனை பெற்றுக்கொள்வதாகவும் கூறினார். அதன் படி நான் ஆவணங்களின் நகல்களை அருகிலிருந்த கடையில் கொடுத்துவிட்டேன். அதன் பின்பு இன்று 16.07.2026ம் தேதி காலை சுமார் 08.23 மணிக்கு VAO திரு.தங்கவேலு அவர்கள் என்னுடைய அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு திரு.சுரேஷிடம் ஆவணங்களை மட்டும் கொடுத்தீர்களா அல்லது பணம் எதுவும் கொடுத்தீர்களா என்று கேட்டார். நான் அதற்கு ஆவணங்களை மட்டும் தான் கொடுத்தேன், பணம் எதுவும் கொடுக்கவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் பணம் ரூ.3,000/–ம் கொண்டு வருமாறு கூறினார். நான் அவரிடம் ஏற்கனவே வாங்கிய பட்டாக்களுக்கும் இந்த சர்வே எண்ணிற்கும் சேர்த்து நிறைய செலவாகிவிட்டது என்று கூறினேன். அதற்கு அவர் இந்த டிபார்ட்மெண்ட் வேற, அந்த டிபார்ட்மெண்ட் வேற என்று கூறி பணம் ரூ.3,000/–ம் வேண்டும் என்று கேட்டார். நான் ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, கிராம உதவியாளர் திரு.சுரேஷ் அவர்களின் செல்போன் எண். 9994379294ல் தொடர்பு கொண்டு VAO அவர்கள் ரூ.3,000/–ம் பணம் கேட்பதாகவும், என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்றும் கூறினேன். அதற்கு அவர் சரி என்று சொல்லி, வேண்டுமானால் ரூ.500/– குறைத்துக்கொண்டு ரூ.2,500/– கொடுங்கள் நான் பேசிக்கொள்கிறேன்

என்று கூறினார். அதன் பின்பு மதியம் சுமார் 03.00 மணிக்கு நான் செந்துறை VAO அலுவலகத்திற்கு சென்று VAO திரு.தங்கவேலு அவர்களை நேரில் சந்தித்து, மீண்டும் பட்டா மாறுதல் சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் மீண்டும் ஆவணங்களை கொடுக்குமாறு என்னிடம் கூறினார். அதனால் நான் கையில் நகல் எடுத்து வைத்திருந்த ஆவணங்களை மீண்டும் கொடுத்தேன். பின்பு அவர் நான் கேட்ட பணம் ரூ.3,000/–ம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். அதற்கு நான் இந்தப்பணம் அரசுக்கட்டணமா என்று கேட்டேன். அதற்கு அவர் என்ன விபரம் புரியாத ஆளாக இருக்கிறீர்கள், உங்களுக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதற்காக எனக்கு கொடுக்க வேண்டிய பணம் என்று கூறினார். நான் பணம் ரெடி பண்ண முடியவில்லை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி என்று சொல்லி, ரூ.1,000/–த்தை குறைத்துக்கொண்டு, ரூ.2,000/–ம் கொடுக்குமாறும், அந்த பணத்தை நாளை அலுவலகம் வந்து திரு.சுரேஷிடம் கொடுக்குமாறும் கூறினார். பின்பு நான் யோசனை செய்ததில் பட்டா மாறுதலுக்காக VAOக்கு லஞ்சம் கொடுத்து வாங்குவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.2,000/–ம் லஞ்சமாக கேட்ட செந்துறை கிராம நிர்வாக அலுவலர் திரு.தங்கவேலு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் நான் எனது மாமியார் பெயரில் பட்டா மாறுதலுக்காக விண்ணப்பித்த இணையவழி பட்டா மாறுதலுக்கான விண்ணப்ப (மனு எண். 2026/0103/13/033309) நகலினை இணைத்துள்ளேன். மேலும் VAO திரு.தங்கவேலு அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,000/–ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/– xxxxx (P.Navamani, 16.07.2026)

Sir, Received the complaint on 16.07.2026 at 18.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. In fact the same accused A–1 Tr.P.Thangavelu, Village Administrative officer was already arrested by Tr.J.Nagarajan, Deputy Superintendent of Police, Vigilance and Anti–Corruption, Dindigul in Dindigul V&AC Crime No.05/2021, u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 23.09.2021 for the allegation of demand and acceptance of undue advantage Rs.4,000/– from Tr.Chinnalagan for making arrangements to issue patta name transfer. This case is

pending trial before this Hon'ble Court in Spl.CC No.02/2022. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in V&AC Cr.No.10/2026, u/s. 7(a) and 12 r/w 7(a) of P.C Act 1988, as amended in 2018, on 16.07.2026 at 19.00 hrs and took up the investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 16.07.2026).

Original FIR along with computer typed complaint of Tr.P.Navamani. S/o.Tr.Pandian, Kurumbapatty, Sendurai, Natham Taluk, Dindigul along with the relevant documents are submitted to the Principal District Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

J Rupa 16/07/26

(J.Rupa Geetharani),
Inspector of Police,
V&AC,
Dindigul.